# பாடம் 53: பாலியல் தூய்மை

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**

முந்திய பாடத்தில், திருச்சபையின் அறநெறி படிப்பினைகள் சார்ந்துள்ள பல கொள்கைகள் குறித்து நாம் கற்றோம். அறநெறி வாழ்வை வாழ்வது என்பது திருச்சபையின் அறநெறி விதிகளைக் கடைபிடிப்பதை விடவும் மேலானது; இது கடவுளில் நமது நம்பிக்கை மற்றும் திருச்சபையின் விசுவாசத்தின் அவசியமான வெளிப்பாடாக இருக்கிறது என்பதையும் நாம் கற்றோம். இந்த பாடத்தில், கத்தோலிக்க அறநெறி வாழ்வின் ஒரு பகுதியாக கற்பு வாழ்வை வாழ்வதன் முக்கியத்துவம் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**

1. 1960களில், ஐக்கிய நாடுகளில் ஏற்பட்ட பாலியல் புரட்சி (அல்லது பாலியல் விடுதலை) உலகின் மற்றப் பகுதிகளையும் பாதித்தது. மரபுசார் ஆண்-பெண்ணுக்கு வெளியிலான பாலின ஏற்பு அதிகரிப்பு மற்றும் ஓரிணை திருமண உறவுகள் உள்ளிட்ட மாற்றங்களின் வீச்சு சமூகத்தில் ஏற்பட்டது. கருத்தடுப்பிகளின் பயன்பாடு, கருக்கலைப்பை சட்டமுறையாக்கல், பொதுவெளி நிர்வாண வெளிக்காட்டல், இழிவரைவை (காமக்காட்சி) பரப்புதல், திருமணத்திற்கு முந்திய பாலுறவு, ஓரினச்சேர்க்கை, மற்றும் கிளர்வின்ப நடைமுறைகள், இன்னும் மாற்றுப் பாலின வடிவங்களைப் பரப்புதல் ஆகியவை பாலியல் புரட்சியின் பின்விளைவுகள் ஆகும்.

மேற்கில் உள்ள பல மக்கள் இந்த நிகழ்வை விரும்பத்தக்கதாகப் பார்க்கின்றனர் ஏனெனில் இது அவர்களுக்கு மரபுசார் எதிர்பார்ப்புகளில் இருந்து "விடுதலை" அளிக்கிறது, நேர்மையாக கவனித்தால் இன்று பெரும்பாலான பெரிய சமூகப் பிரச்சனைகள், பாலியல் புரட்சியில் இருந்து அனுமதித்து, பரப்பப்பட்ட பாலியல் முறைகேட்டின் பின்விளைவுகளாக இருக்கிறதை உய்த்துணரலாம். இதன் விளைவாக, உலகளாவிய எய்ட்ஸ் பெருந்தொற்று, பாலுறவால் பரவும் நோய்கள், ஒவ்வொரு ஆண்டும் பிறக்காமல் கருவில் அழிக்கப்படும் பல நூறாயிரம் குழந்தைகள், பெண்கள் மற்றும் குழந்தைகளிடம் பாலியல் முறைகேடு, மற்றும் மணமுறிவுகளின் எண்ணிக்கை அதிகரிப்பு போன்ற பல சமூகப் பிணிகள் ஏற்பட்டுள்ளன.

2. தொடர்ச்சியாக, பாலியல் அறநெறி பிரச்சனைகள் இன்று கத்தோலிக்கத் திருச்சபைக்கு உள்ளும் வெளியும் விவாதிக்கப்படும் மிகவும் சர்ச்சைக்குரிய விடயங்களாக இருக்கின்றன. பாலியல் புரட்சி காரணமாக சமூகம் மிகவும் பாலியல் சார்ந்ததாக மாறியுள்ளது, மேலும் இது ஊடகத்தின் தாக்கத்தால் மிகையாக்கப்பட்டு, மக்களின் நற்பாங்கு மற்றும் அறநெறி உணர்வுகளைப் பாதித்துள்ளது. பாலியல் அறநெறி பிரச்சனைகள் சார்ந்த சர்ச்சைக்குரிய ஒவ்வொரு பிரச்சனையும் மக்களை திருச்சபைக்கு உள்ளும், அதற்கு வெளியிலும் பிரிக்கிறது: திருமணத்திற்கு புறம்பான பாலுறவு (பரத்தைமை), கருக்கலைப்பு, பாலின அடையாளம், மற்றும் மணமுறிவும் மறுமணமும், மற்றவையும்.

கத்தோலிக்கத் திருச்சபை வரலாற்றில் ஒருபோதும் நேர்மறையாகப் புகழ் பெற்றதில்லை, ஆனால் மனித வரலாற்றில் முதல் முறையாக இருந்தாலும் பாலின விடயங்களில் திருச்சபை மிகவும் மையம் பெற்றுள்ளது. இந்நாட்களில், பாலியல் அறநெறி குறித்த கத்தோலிக்கத் திருச்சபையின் மரபுசார் படிப்பினை நடைமுறைக்கு ஒவ்வாதது என மக்கள் கருதுகின்றனர். திருச்சபை தனது போதனைகளால் நலமற்ற பாலியல் நடைமுறைகளைப் பரப்புவதாகச் சிலர் குற்றம் சுமத்துகின்றனர். அவற்றில் மற்றபடி பேச மறுக்கின்றனர்.

*ஜி.கே. செஸ்டர்டன்*: ‘‘நான் எங்கே தவறாக இருக்கிறேன் என்று ஏற்கெனவே அறிந்துள்ளதைச் சொல்ல எனக்குத் திருச்சபை தேவையில்லை; நான் சரி என நினைப்பதில் தவறு இருந்தால் சொல்லவே எனக்குத் திருச்சபை தேவைப்படுகிறது.’’

கத்தோலிக்கத் திருச்சபையின் அறநெறி படிப்பினைகள் குறித்த இந்த அடுத்த சில பாடங்கள், பாலியல் அறநெறி குறித்த சமூகத்தின் திரிபானப் பார்வையில் இருந்து எழுகின்ற எல்லா பிரச்சனைகளையும் எடுத்துரைப்பது சாத்தியமற்றது எனினும், சில முக்கியப் பிரச்சனைகளை அணுகுகின்றன.

4. பாலியல் நெறிகேடு எப்பொழுதும் தீவிர நலவாழ்வுக்கு ஆபத்தைக் கொணரும். பாலுறவால் பரவும் நோய்கள் தீவிரப் பாலியல் செயல்பாட்டில் உள்ளோரில் பாதிக்கும் மேற்பட்டவர்களைப் பாதித்துள்ளன. பாலியல் நெறிகேட்டின் விளைவாக எய்ட்ஸ் நோய் மற்றும் மலட்டுத்தன்மை பிரச்சனைகள் அதிகரித்துள்ளன. ஆகவே இந்த சமூகம் கடவுளின் வழிகள் மற்றும் அறநெறி தரநிலைகளுக்குத் திரும்புவது முக்கியமானது.

5. மனிதர்களுக்கு இடையிலானப் பாலுறவை விலங்குகள் இடையிலானச் செயல்பாடு போன்று நாம் சிந்திக்க முடியாது, ஏனெனில் விலங்குகளின் உடல்சார் அல்லது உயிரியல்சார் வெறும் செயல்பாடாக பாலுறவு மனிதர்களுக்கு இல்லை. மனிதர்களுக்கு, ‘‘தமது உடல் மற்றும் ஆன்மாவின் ஒன்றிப்பான மனிதரின் எல்லா அம்சங்களையும் பாலியல்பு பாதிக்கிறது’’ (கதிம 2332). மற்ற வார்த்தைகளில், நமது பாலியல்பு நமது உடல்களை மட்டுமின்றி, நமது மனங்களையும் நமது ஆன்மாக்களையும் பாதிக்கிறது. இது ஏனெனில் மனிதர் என்பவர் உடல் மற்றும் ஆன்மாவின் ஒன்றிப்பாக இருக்கிறார்.

6. பாலியல் பாவம் என்பதன் எதிர்ப்பதமாகக் கற்பு இருக்கிறது. செயலின் மற்றும் இதயத்தின் தூய்மையே கற்பு ஆகும். சட்டப்பூர்வ மற்றும் குறைபாடற்ற அறநெறி சார்ந்த பாலியல் செயல்களை உள்ளடக்கியுள்ளது. மனிதகுலம் பாவம்நிறை பாலியல் செயல்கள் மீது சாய்ந்து நிற்கிறது என்பதால், கற்புக்குத் தற்கட்டுப்பாடு மற்றும் தன்னடக்கப் பயிற்சி தேவையாகிறது. நமது விருப்பார்வங்கள் நம்மை ஆள்வதற்கு நாம் அனுமதிக்கும் பொழுது, நாம் மகிழ்ச்சியற்ற மக்களாக மாறுகிறோம். மற்ற வார்த்தைகளில், கற்பின் குறைபாடானது மகிழ்ச்சி மற்றும் நிறைவின் குறைபாட்டுக்கு இட்டுச் செல்கிறது.

*கதிம 2339*: “கற்பு என்பது மனித விடுதலையில் ஒரு பயிற்சியாக இருக்கிற *தற்கட்டுபாட்டு பயில்வை* உள்ளடக்கியுள்ளது. மாற்று தெளிவாக உள்ளது: மனிதர் தமது விருப்பார்வங்களை நெறிப்படுத்தி அமைதி காண்கிறார், அல்லது அவர் அவற்றைத் தம்மீது ஆதிக்கம் செலுத்த விட்டு மகிழ்ச்சியற்றவர் ஆகிறார். “ஆகவே மனிதரின் மாண்பு நனவுநிலைக்கும் சுதந்திரத் தெரிவுக்கும் அப்பாற்பட்டு செயல்பட, தனக்குள் உள்ள கண்மூடித் தாக்கங்கள் அல்லது வெறும் வெளிப்படை வரன்முறைகளால் அன்றி, உள்ளிருந்து ஒரு தனிப்பட்ட வழியில் இழுக்கப்பட்டு நகர்ந்திட அவரை வேண்டுகிறது. விருப்பார்வங்களுக்கான தமது எல்லா அடிமைத்தனத்தையும் அகற்றி, எது நல்லது என்று சுதந்திரமாகத் தேர்ந்தெடுத்து தமது இலக்கிற்கு முன்னேறி, தமது விடாமுயற்சியாலும் திறமையாலும் இந்த முடிவுக்குத் தகுந்த விதத்தில் தம்மைச் சிறப்பாகப் பாதுகாத்துக்கொள்ளும் பொழுது, மனிதர் அத்தகைய மாண்பைப் பெறுகிறார்.’”

7. கற்பு என்பது பிறரன்பைச் செயல்படுத்தும் அல்லது பிறரை நோக்கிய அன்புக்கான ஒரு வழியாகவும் இருக்கிறது. அது “அதைப் பயிற்சி செய்கிறவரை தமக்கு அடுத்துள்ளவருக்கு கடவுளின் நம்பகத்தன்மை மற்றும் அன்பின் கனிவுக்கு சாட்சியாக மாறச் செய்கிறது.” (கதிம 2346).

8. *கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி* கற்புக்கு எதிரான ஆறு வகை பாவங்களைப் பட்டியலிடுகிறது:

அ) உடலிச்சை

ஆ) கிளர்வின்பம்

இ) பரத்தைமை

ஈ) இழிபதிவு

உ) விபசாரம்

ஊ) வன்புணர்வு

9. **உடலிச்சை.** *கதிம 2351*: “உடலிச்சை என்பது பாலியல் இன்பத்தின் குறைபாடுள்ள ஆசையாக அல்லது முறையற்ற அனுபவிப்பாக இருக்கிறது. பாலியல் இன்பமானது அதன் இனப்பெருக்க மற்றும் சேர்க்கை நோக்கங்களைத் தவிர்த்து இன்பத்திற்காக மட்டும் நாடப்படும் பொழுது அறநெறி குறைபாடுள்ளதாக இருக்கிறது.”

பாலியல் இன்பம் என்பது தன்னிலேயே மோசமானது அன்று. பாலுறவை உருவாக்கியவர் கடவுளே, அதைத் திருமண உறவுநிலைகளின் சரியானச் சூழமைவில் செயல்படுத்தும் பொழுது அது மகிழ்ச்சி தருகிறது (கதிம 2362). இன்னுமாக, சரியானச் சூழமைவில் பாலுறவில் ஈடுபடுவது இரண்டு முக்கிய நோக்கங்களைக் கொண்டுள்ளது: ஆணையும் பெண்ணையும் ஒரே உடலாக *ஒன்றிணைத்தல்*, மற்றும் ஒன்றிப்பின் விளைவாக புதிய நபர்களை *இனப்பெருக்கம் செய்தல்*. எனினும், ஒருசேர இருப்பதற்காக கடவுள் வடிவமைத்த

பாலுறவின் இரண்டு அம்சங்களை உடலிச்சை பிரிக்கிறது. இது இறைமையால் நிறுவப்பட்ட பாலுறவின் பாலுறவின் நோக்கங்களுக்கு அப்பால் இன்பத்தைப் பெறுவதாக இருக்கிறது.

எனினும், பாலியல் கிளர்வு உணர்வுகள் தன்னிலேயே உடலிச்சையாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. பாலியல் ஒன்றிப்பு மற்றும் இனப்பெருக்க நோக்கங்களை மதிக்காமல் இன்பத்திற்காக மட்டும் நமது எண்ணங்கள் மற்றும் உணர்வுகளை விருப்பத்தினால் கிளர்வதே உடலிச்சை ஆகும்.

10. **கிளர்வின்பம்.** *கதிம 2352*: "பாலியல் இன்பம் பெறும் உள்நோக்கத்துடன் பாலுறுப்புகளை தூண்டுவதே கிளர்வின்பம் என்று புரிந்துகொள்ளப்பட வேண்டும். 'கிளர்வின்பம் என்பது உள்ளார்ந்த மற்றும் கடுமையான ஒழுங்கற்றச் செயல்பாடு என்று திருச்சபை ஆசிரியத்தின் நிலைத்த மரபிலும், விசுவாசிகளின் அறநெறி உணர்விலும் உறுதியாகப் பேணப்படுகிறது.' 'பாலியல் திறனை, திருமணத்திற்கு வெளியே எந்த காரணத்திற்காகவும் உள்நோக்கத்துடன் பயன்படுத்துவது அதன் நோக்கத்திற்கு முரணானது ஆகும்.' இங்கு 'ஊடிடைத் தன்னளிப்பு மற்றும் மனித இனப்பெருக்கத்தின் முழுமைப் பொருளுக்கான உண்மை அன்பின் சூழல் அடையப்படுகின்ற அறநெறி ஒழுங்கால் கோரப்படும் பாலியல் உறவுநிலைக்கு' வெளியே பாலியல் இன்பம் நாடப்படுகிறது. ..."

நாம் கிளர்வின்பத்தைப் பொறுத்துக் கொண்டு சாதாரணமாகப் பார்த்தால், எல்லா பாலியல் செயல்பாடுகளும் ஒருவரின் தனிப்பட்ட இன்பத்திற்காகவே என்பது சரியானது என்று நாம் உண்மையில் கூறுகிறோம். கிளர்வின்பம் என்பது வழக்கமாக உடலிச்சை பாவனைகளோடு இணைந்திருப்பதால், அதை "பாதிப்பற்ற குற்றமாக" பார்க்க முடியாது ஏனெனில் மற்றொரு நபர் இந்த செயல்பாட்டில் ஒரு பொருளாக எண்ணப்படுகிறார். கிளர்வின்பச் செயல்பாட்டில், இனப்பெருக்கம் மட்டுமின்றி, அன்பும் சாத்தியமற்றதாக மாறுகிறது. ஆகவே, கிளர்வின்பமானது பாலுறவின் நோக்கத்தையும் பொருளையும் மறுக்கிறது.

கிளர்வின்பம் உண்மையில் மனதுக்கும் உடலுக்கும் நலமானது என்று கூறுகின்ற நவீன உளவியலாளர்கள் இருக்கின்றனர் என்பது உண்மை. இந்த உலகம் உண்மையில் பல பாவம் சார்ந்த ஒழுங்கற்ற விடயங்களை "நல்லது" என்று கூறுகிறது, ஏனெனில் இந்த விடயங்கள் ஒரு நபருக்கு "மகிழ்ச்சி உணர்வை" அளிக்கின்றன. பாவத்தில் விழக்கூடிய மக்களாக இருக்கிறதால், ஒழுங்கற்றச் செயல்கள் நமக்கு "மகிழ்ச்சி உணர்வை" அளிக்கின்றன; ஆனால் போதைக்கு அடிமையாதல் போன்ற, அத்தகைய "மகிழ்ச்சி" நிலையானது அன்று. ஒருவரின் தனிப்பட்ட இன்பத்தில் கவனம் செலுத்துகிற மற்றும் எது உண்மையில் நல்லது என்று பொருட்படுத்தாத ஒரு செயல் அன்பின் செயலாக இருக்க முடியாது, அது நலமான செயலை விட மிகத் தாழ்வானது.

கிளர்வின்பம் என்பது ஒரு பொதுவானப் பழக்கமாக இருக்கிறதால் அது சரியானது ஆகாது. ஒரு பழக்கம் எவ்வளவு பொதுவாக நடைமுறையில் உள்ளது என்பதைக் கொண்டே அதன் சரியானத்தன்மையை நாம் நியாயப்படுத்த முடியாது. ஒரு செயலின் அறநெறியானது மனித இயல்புக்கேற்ப கடவுள் அதை எப்படி வடிவமைத்துள்ளார் என்பதை மதிக்கும் அடிப்படையில் தீர்ப்பிடப்பட வேண்டும்.

11. **பரத்தைமை.** *கதிம 2353*: ‘‘பரத்தைமை என்பது மணமாகாத ஓர் ஆணுக்கும் மணமாகாத ஒரு பெண்ணுக்கும் இடையிலான உடல்சார் ஒன்றிப்பாகும். இணையர் மற்றும் தலைமுறையின் நன்மைக்கும் மற்றும் குழந்தைகளின் கல்விக்கும் இயல்பாக ஒழுங்கமைந்த மனிதப் பாலியல்பு மற்றும் நபர்களின் மாண்புக்கு இது மிகவும் முரணானது. மேலதிகமாக, இளையோர் சுரண்டப் படுகின்ற வேளையில் இது பெரும் முறைகேடாக இருக்கிறது.

பரத்தைமையில் ஈடுபடுகிறவர்களில் ஒருவருக்கு ஏற்கெனவே மற்றொருவருடன் திருமணம் ஆகியிருந்தால், அது விபசாரமாக மாறுகிறது. விபசாரத்தில் ஈடுபடுகிற நபர் தம் துணைவரின் உரிமைகளுக்கான தமது அர்ப்பணத்தில் தவறுகிறார் (கதிம 2381), திருமண நிறுவலைச் சிதைக்கிறார், தம் பெற்றோர்களின் நிலைத்த ஒன்றிப்பு தேவைப்படுகின்ற தம் குழந்தைகளின் நலனில் சமரசம் செய்கின்றார். ஆகவே, விபசாரம் ஒரு நபரைத் தமக்கு எதிராக, தம் துணைவருக்கு எதிராக, தம் குழந்தைகளுக்கு எதிராக, மற்றும் முழு சமூகத்திற்கும் எதிராகப் பாவம் செய்ய வைக்கிறது.

12. **இழிபதிவு.** *கதிம 2354*: ‘‘இழிபதிவு (ஆபாசம்) என்பது மெய்யை விலக்குவதில் அல்லது பாலியல் தூண்டுதல் செயல்களில் துணைவரின் நெருக்கத்தைத் தவிர்த்து, தங்களை மூன்றாம் நபருக்கு உள்நோக்கத்துடன் காட்டுவதில் அடங்கியுள்ளது. இது கற்புக்கு எதிரானது, ஏனெனில் துணைவர்கள் ஒருவர் மற்றவருக்கு நெருக்கம் கொடுக்கும் மணவுறவுச் செயலில் இருந்து பிறழ்வதாக இருக்கிறது. இது பங்கேற்போரின் (நடிகர்கள், வணிகர்கள், பொதுமக்கள்) மாண்பை மிகவும் காயப்படுத்துகிறது, ஏனெனில் ஒவ்வொருவரும் அடிப்படை இன்பத்திற்கான ஒரு பொருளாகவும் மற்றவர்களுக்கு சட்டத்திற்கெதிரான லாபமாகவும் மாறுகின்றனர். கற்பனை உலகின் மாயநிலையில் இதில் ஈடுபடுவோர் எல்லாரையும் இது மூழ்கடிக்கிறது. இழிபதிவு பொருட்களின் தயாரிப்பு மற்றும் பகிர்வை குடிமை அதிகாரிகள் தடுக்க வேண்டும்.’’

இழிபதிவு பொருட்கள் ஆண்களுக்கு மட்டுமே கிடைக்கிறது என்று பலரும் கருதுகின்றனர், ஆனால் அது உண்மையன்று பெண்களும் இதனால் பாதிக்கப்படுகின்றனர். இழிபதிவு பொருட்களில் படக்காட்சிகள் மட்டுமின்றி, பாலியல் சார்ந்த அப்பட்ட வார்த்தை விவரிப்புகளும் அடங்கும்.

இழிபதிவை அணுகுவது ஒருபோதும் ஒருமுறை மட்டும் நிகழும் செயலன்று. இவற்றைத் தயாரிப்போர் தங்கள் நுகர்வோர் இவற்றுக்கு அடிமையாகி தங்கள் நடத்தை மீதான சொந்த கட்டுப்பாட்டை இழக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளனர். காலப்போக்கில், இழிபதிவு

அடிமை பாலியல் கிளர்வைப் பெறுவதற்கு அதிகமான காமக்காட்சிகளை எதிர்பார்க்கிறார். ஒரு நபர் இதற்கு அடிமையாகி விட்டால், இதன் எதிர்நிலை மற்றும் அறநெறியின்மை குறித்து உணர முடியாதவராக மாறுகிறார். இழிபதிவுக்கு அடிமையான ஒரு நபர், மற்றொரு மனிதரை தமக்கு சமமான மதிப்புக்குரியவராக அன்றி, ஒருவரின் சொந்த இன்பத்துக்காக விரும்பி அனுபவிக்கப்படும் ஒரு பொருளாகப் பார்க்கின்றார். பெரும்பாலான நபர்களில், இழிபதிவு நுகர்வு கிளர்வின்பப் பழக்கத்துக்கு இட்டுச் செல்கிறது, சில நபர்களை இது சட்டத்துக்குப் புறம்பான (அறநெறியற்ற) செயல்களுக்கு இட்டுச் செல்கிறது.

13. **விபசாரம்.** *கதிம 2355*: ‘‘விபசாரம் என்பது அதில் ஈடுபடும் நபரின் மாண்பைக் காயப்படுத்துகிறது, அந்த நபரை பாலின்பத்தின் கருவியாகத் தாழ்த்துகிறது. அதற்கு பணம் செலுத்துகிறவர் அவருக்கு எதிராகப் பெரும் பாவம் செய்கிறார்: அவர் தமது திருமுழுக்கோடு இணைந்த கற்பைக் கெடுக்கிறார், தூய ஆவியாரின் கோயிலான உடலைக் கறைபடுத்துகிறார். விபசாரம் ஒரு சமூகத் தீமையாகும். இதில் வழக்கமாகப் பெண்கள் ஈடுபட்டாலும், ஆண்களும், குழந்தைகள் மற்றும் விடலைகளும் ஈடுபடுகின்றனர் (பிந்திய இருதரப்பினரும் முறைகேடாக பாவத்தில் தள்ளப்படுகின்றனர்)....’’

14. **வன்புணர்வு.** *கதிம 2356*: ‘‘வன்புணர்வு என்பது மற்றொரு நபரின் பாலியல் நெருக்கத்தை வலுக்கட்டாயமாக மீறுவதாகும். இது நீதியையும் பிறரன்பையும் காயப்படுத்துகிறது. மரியாதை சுதந்திரம், மற்றும் ஒவ்வொரு நபரின் உரிமையான உடல் மற்றும் அறநெறி சார்ந்த ஒருங்கிணைவில் ஆழ்ந்த காயத்தை ஏற்படுத்துகிறது. இது பாதிக்கப்பட்டவரில் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் தீவிர பாதிப்பை ஏற்படுத்துகிறது. இது எப்பொழுதும் உள்ளியியல்பிலே தீயச் செயலாகும். பெற்றோர்கள் குழந்தைகளை (தகாப்புணர்வு) அல்லது கல்விக்கானப் பொறுப்பாளர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளை வன்புணர்வு செய்தல் இன்னும் கொடுமையானது.’’

15. பிலிப்பியர் 4:8ல் புனித பவுல் நம்மை ஊக்குவிக்கிறார்: ‘‘... உண்மையான அனைத்தாலும், கண்ணியமான அனைத்தாலும், நேர்மையான மற்றும் தூய்மையான அனைத்தாலும், நாம் விரும்புகிற மற்றும் பாராட்டுகிறவற்றோடு, நல்ல மற்றும் போற்றுதற்குரிய அனைத்தாலும் உங்கள் மனங்கள் நிரப்பப்படட்டும்.’’

இந்த ஊக்குவிப்பு நம் ஆண்டவர் கற்பித்த ஆறாம் பேற்றினை எதிரொலிக்கிறது: ‘‘தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர், அவர்கள் கடவுளைக் காண்பர் (மத் 5:8). நமது மனங்களும் விருப்பங்களும் கடவுளின் தூயநிலைக்கு இசைந்திருக்கும் பொழுது, நாம் மகிழ்வோடும் அமைதியிலும் இருக்கிறோம். நமது உள்ளங்கள் தூயவையாக இருக்கின்ற பொழுது, நாம் கடவுளை முகத்துக்கு நேராகக் காண்போம், மேலும் அவரைப் போன்று இருப்போம் என்பது வாக்குறுதி. நாம் விண்ணகப் பேரின்பக் காட்சியை அடைய விரும்பினால், நாம் இதயத்தின் தூய்மை என்ற நிபந்தனையை நிறைவேற்ற வேண்டும்.

16. தூய இதயம் கொண்டிருத்தல் என்பது கடினமானது ஆனால் உண்மையில் சாத்தியமற்றது அன்று. தூய்மை மற்றும் கற்பைப் பண்படுத்த உதவும் சில முக்கிய நடைமுறைகள் இதோ:

அ) நாம் நமது சொந்த பலத்தால் தூய்மை அடைய முடியாது என்பதை ஒப்புக்கொள்வது தேவையாகிறது, ஏனெனில் நாம் வலுவற்றவர்களாகவும் பாவத்தில் விழக் கூடியவர்களாகவும் இருக்கிறோம்;
ஆ) நாம் (ஏதுவற்ற உணர்வைப் பெற்றாலும்) நமக்கே நேர்மையுள்ளவர்களாகவும், நமது வாழ்வில் நாம் வீழ்கின்ற இடங்களை நியாயப்படுத்த முயற்சிக்காமலும் இருக்க வேண்டும்;
இ) ஒப்புரவு அருளடையாளத்தை வழக்கமாகப் பெறுகின்ற ஒழுங்கை நிறுவ வேண்டும், ஏனெனில் சாத்தான் நமது வாழ்வின் மீது செலுத்த விரும்பும் ஆதிக்கத்தைத் தடுக்க இந்த அருளடையாளம் நமக்கு உதவுகிறது;
ஈ) நமது வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும், நமது இதயங்களில் நாம் கொண்டுள்ள ஒழுங்கற்ற ஆசைகள் உள்பட, கடவுளிடம் ஒப்படைக்க நாள்தோறும் நமக்கு நினைவூட்ட வேண்டும்;
உ) நாம் எப்பொழுதும் நம்மைப் பாவம் செய்யத் தூண்டுகிற சூழல்களைத் தவிர்த்து, நம்மில் தூயநிலை வளர்வதற்குத் துணைநிற்கும் சூழல்களில் நம்மை வைத்திருக்க வேண்டும்;
ஊ) நாம் நமது வாழ்வில் நாள்தோறும் செபிக்கும், தூயநிலைக்கு நம்மைத் தூண்டும் புனிதப் படங்களை நம்மைச் சுற்றி வைத்திருக்கும் வலுவானப் பழக்கத்தை வளர்க்க வேண்டும்;
எ) பாவத்திற்கு எதிரான இந்த போராட்டத்தில் நாம் தனியாக இல்லை, ஏனெனில் இந்த சண்டையில் நமது பக்கத்துணையாக இருக்கிற தூய ஆவியார் நமக்கு வலுவூட்டுகின்றார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

17. கற்பு என்பது அடக்குதல் குறித்தது அன்று. அடக்குதல் என்பது நம்மிடம் இருக்கின்ற ஒழுங்கற்றப் போக்கினை மறுத்தல் ஆகும். பாவம் மற்றும் ஒழுங்கற்ற கவர்ச்சிகளுக்கு நாம் ஆட்படும் வாய்ப்புள்ளதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இந்த ஒப்புதலானது பாவத்தின் ஈர்ப்பை வெல்லும் நம் முயற்சிகளோடு இணைந்திருக்க வேண்டும், அதனால் நாம் ‘‘கடவுளின் பிள்ளைகளாக மாட்சிக்குரிய சுதந்திரத்தில்’’ வாழ முடியும் (உரோ 8:21).